# கைநூல் மற்றும் செயல்நூல் தொடர்பாக "அடித்தளங்களும் பின்னணிகளும்"

இப்போதைய இக் கைநூலுக்கான முதல் தூண்டுதல் பாரம்பரிய மொழி வகுப்பின் (பா.மொ.க HLT, சுவிற்சர்லாந்தில்: HSK) ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு சலிப்புடன் கூறினார்: "இங்கு தற்போதைய ஆசிரியக்கலை மற்றும் கற்பித்தலில் எங்களை மிக நன்றாக ஈடுபடுத்தித் துணைசெய்வதற்கு எம்மிடம் ஒரு கைநூல் இல்லையே என்ற ஏக்கம் உள்ளது" மூன்று ஆண்டுகளின் பின் மிகக் கடுமையான முயற்சியின் பயனாக எமது எண்ணம் ஈடேறி இந்நூல் கவர்ச்சியான தாகவும் பயனுள்ளதாகவும் நிறைவு பெற்றுள்ளது.

புதிய ஆசிரியர்களுடன் பட்டறிவுள்ள பா.மொ.க ஆசிரியர்களுக்கும், பல்வேறு புலம்பெயர் நாடுகளில் அவர்களுக்குப் பொறுப்பாகவுள்ள (தூதுவர்கள், உள்ளூர் கல்வி அதிகாரிகள், முதலிய) அரச அமைச்சுகள், நிறுவனங்கள் உட்பட்டவைக்குமாக இக் கைநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கைநூல் எளிமையாக விளங்கும்படியாகவும் நடைமுறை வழக்கிலும், மூன்று பரப்புகளை உள்ளடக்கியதாக தகவல்களை வழங்குகின்றது:

- தற்போதைய ஆசிரியர்கலை, கற்பித்தல், நெறிமுறை ஆகியவற்றின் திறவுப் பண்புகளே மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய புலம்பெயர் நாடுகளின் பள்ளி அமைப்புகளின் நடைமுறையாகும். இது தொடர்பான மிக நல்ல ஈடுபடுத்தலுக்கான நோக்கம் 3-8 ஆம் இயல்களில் சிறப்பாக வழங்கப்பட்டுள்ளது. பலவற்றுள், அவை காண்பிக்கின்றவை: கற்பித்தல் மற்றும் ஆசிரியர்கலை நிலைகளின் தரமான நடைமுறைகள் பற்றிய தற்போதைய இசைவு அளவு, கற்பித்தல் கற்றலில் எத்தகைய மாதிரிகள் தற்போது உள்ளன, மற்றும் அளிக்கைக் கணிப்பிலும் மொழியியல் தகைமையை முன்னெடுப்பதிலும் இன்றியமையாதவை. இத்தகவல் ஒருவரின் தனிக் கற்பித்தற் பாங்கினை வழமையான பள்ளிகளில் நிலவும் பாங்குடன் இணைப்பதற்கும், அதனூடாக பா.மொ.க மற்றும் வழமையான வகுப்புகளுக்கு அடிக்கடி செல்லும் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறினைத் தவிர்ப்பதற்கும் இன்றியமையாததாகும்.

- 9-12 வரையான இயல்கள் பா.மொ.க வின் சிறப்புச் சூழ்நிலையுடன் அதன் அறிவுறுத்தல் பண்புகளைக் குறிப்பாக விளக்குகின்றன. அவை பா.மொ.க வுக்கான பொருள் தேர்வு, கருப்பொருள்கள் மற்றும் கருவிகள் பற்றிக் கூறி, கல்வித் திட்டங்களுக்கான மாதிரிகளைப் பரிந்துரைத்து, வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடனான கூட்டுறவு நிகழக்கூடிய நிலையை வழங்குகின்றன.

- பா.மொ.க வின் நோக்கங்கள், மற்றும் பா.மொ.க ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றுக்கான தகவற்கனமுள்ள பின்னணித் தகவல் 1-2 இயல்களிலே காணப்படுகிறது. மேலும் பண்புகள் மற்றும் சிக்கல்கள் - எ.டு. பா.மொ.க ஆசிரியர்களின் வாண்மைவிருத்தி பற்றிய சிக்கல் அல்லது வழமையான பள்ளி ஒழுங்கமைப்பினுள் அதன் ஒருங்கிணைப்புப் பற்றிய பல மாதிரிகள் 13-15 இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து எதிர்காலத்துக்கான பார்வையினை நிறைவு இயல் வழங்குகிறது.

1-15 வரையான இயல்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பகுதி A - பின்னணிகளை உள்ளடக்கியுள்ளது. பகுதி B - பா.மொ.க , பட்டறிவு அறிக்கைகள் முதலியனவற்றிலிருந்து நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் கொடுக்கின்றது. பகுதி C - குறிப்பிட்ட இயல் தொடர்புள்ள உருக்காட்டலுக்கான தூண்டுதல்கள், உரையாடல், மற்றும் ஆழமான ஒரு மீள்பார்வை ஆகியனவற்றை வழங்குகிறது. பகுதி A - உண்மை மெய்மை, தரநிலை ஆகியவற்றுக்கானது. பகுதி B- பா.மொ.க.வின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை நிலைநிறுத்துகிறது. பகுதி C - யில் உள்ள தூண்டுதல்கள் பொருளை விளங்கிக்கொள்ளதக்க ஆய்வு நிகழ்த்த துணை செய்கின்றன. அத்துடன் பயிற்சிக் கருத்தரங்குகளிலும் உரையாடற் குழுக்களிலும் கற்றல் வளநூலாக கைநூலைப் பயன்படுத்த எளிதாக்குகின்றன. இத்தகைய பயன்பாட்டை மேலும் மிகுதிப்படுத்துவது கைநூல் நேரியல் வேலைக் கட்டமைப்பை வேண்டுவதில்லை என்பதாகும். தனித்தனி இயல்கள் சார்புடையன அல்ல. படிப்பவரின் தெரிவுக்கேற்ப எவ்வித சிக்கலுமில்லாமல் எத்தொடர் வரிசையிலும் படிக்கலாம் அல்லது பயன்படுத்தலாம்.

வல்லுநர்களின் இணைவு இன்றி இது போன்ற உயர்நிலை நூல் கருத்திட்டம் நிறைவேறுவது என்பது நினைக்கமுடியாத ஒன்றாகும் என்பது இக் கைநூலுக்காக 17 மொழிக்குழுக்களும் ஐந்து நாடுகளைச் சேர்ந்த 67 க்குக் குறையாத ஆட்களும் ஒன்றுசேர்ந்து உழைத்தமை உண்மைச்சான்றாகும். A பகுதிக்கு சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, ஒஸ்ரியா ஆகிய நாடுகளிலிருந்து 21 பேர்பெற்றவர்களும், B பகுதிக்கு இங்கிலாந்து, சுவீடன், ஜேர்மனி, ஒஸ்ரியா, சுவிற்சர்லாந்து ஆகியவற்றிலிருந்து 33 பா.மொ.க ஆசிரியர்களும் 10 மாணவர்களும் அவர்களுடன் மூன்று கல்வியாளர்களும் அமைச்சுத் துறை சார்ந்தவர்களும் பணிசெய்தார்கள். அசலின் குணத்தினையும் கருவிகளின் நம்பகத் தன்மையினையும் பேணுவதற்காக எழுத்துருக்கள் பதிப்புத் தொடர்பாக மிகக் குறைந்த அளவிலேயே தழுவப்பட்டன. இது A பகுதியில் குறிப்பிட்ட சிலவற்றின் துல்லியமான அளவு வேறுபாடுகளுக்கு இட்டுச் சென்றது. ஆனால் அது எவ்விதத்திலேனும் நூலைப் பாதிக்கவில்லை.

இத்தகைய பரந்த புகழ்மிக்க குழுக்களையும் ஆசிரியர்களையும் ஆட்சேர்த்தல், பயிற்சியளித்தல், தொடர்புபடுத்தல் என்பன கேள்விக்கிடமின்றி ஓர் அச்சுறுத்தலான பணியாகும். அதனுடன் தொடர்புபட்ட முயற்சிகள் பயனுடையவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதன்படி, கோட்பாட்டளவில் கைநூல் மிக வலுவான நிலையிலுள்ளது. மிக உயர்ந்த அளவு நடைமுறைப் பண்பினையும் நடைமுறை இணக்கத்தினையும் அளிக்கிறது. பல நாடுகள் மொழியியற் குழுக்கள் ஆகியவற்றின் பல் முன்னோக்குகளையும் பட்டறிவுகளையும் அடிப்படையாகக்கொண்ட ஒரு கண்ணோட்டத்தையும் உடையது.